# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 8 ஆகஸ்டு 2005




## கிறுஸ்துவின் சபை


தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. பரலோகத்திற்கு ஒரே வழி இருப்பது ஏன்? ........ 11
3. பெண்கள் பகுதி ........ 17
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 24
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
7. நாம் அழைக்கப்பட்ட அழைப்பை பாருங்கள் ...... 30

# THIRUMARAI AASAAN

Published by Church of Christ

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 18 August - 2005 Issue - 8


ஆசிரியர் உரை

## அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியா

அநேக சமயங்களில் ஒரு நபரின் பெயரைக் குறித்து நாம் கேட்கும் போதும், படிக்கும் போதும் நமக்குச் சட்டென நினைவுக்கு வருவது அப்பெயருக்குரிய பிரபல நபராகத்தான் இருக்கும். ஒரு வேளை அதே பெயருக்குரிய வேறு பலர் ஆங்காங்கே இருந்தாலும் புகழ்பெற்றவர்கள் தான் நம் கண்முன் வந்து உடனடியாகக் காட்சி தருவர். இது எல்லோருக்கும் பொதுவான ஒன்றுதான். இந்த அடிப்படையில் ஒபதியா என்றவுடன் வேதாகமத்தை ஓரளவுக்காகிலும் தெரிந்து வைத்திருப்பவர்களுக்கு உடனடியாக நினைவுக்கு வருவது தீர்க்கன் ஒபதியாவாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் இந்த ஒபதியாவின் பெயர் தான் 66 புத்தகங்களின் வரிசையில் இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, இந்த வகையில் இவன் பெயர் கொஞ்சம் பரிச்சயமானதாகத் தெரியும். அத்தோடு தீர்க்கதரிசி என்ற முறையில இவன் பற்றிய காரியங்களையும் கொஞ்சம் கூடக் குறைய தெரிந்து வைத்திருப்போம்.

இப்படிப் பிரபலமானவர்களையும் அவர்கள் குறித்த காரியங்களையும் அறிந்து வைத்திருப்பது சிறந்ததாகவும் நன்மையானதாகவும் இருந்தாலும் இப்பிரபலங்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் பற்றி சுத்தமாக எதுவும் தெரியாமலிருப்பது எப்படி நியாயமாகுமென்று எனக்கு விளங்கவில்லை. ஒரு வேளை உலகப் பிரகாரமாக இது எப்படியிருந்தாலும், வேதாகம காரியத்தில் இது கண்டிப்பாக ஒரு நியாயமான அணுகுமுறையாகத் தெரியவில்லை. ஏனெனில், வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டு தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையயுஞ் செய்யத்

தகுதியுள்ளவனாகவும் இருக்கவேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கும் போது, வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பவர்களில் ஒரு சிலரை அல்லது குறிப்பிட்டவர்களை மட்டும் பொறுக்கியெடுத்து அவர்களைப் பற்றிய காரிங்களில் மாத்திரம் பரிச்சயம் பெற்றவர்களாயிருந்து மற்றவர்கள் பற்றி ஏதும் அறியாதவர்களாயிருந்தால், நாம் எப்படித் தேறினவர்களாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வர்களாகவும் இருக்க முடியும்? சொல்லுங்கள். முடியாது தானே!

தேவ காரியத்தில் இப்படிப் பாரபட்சமாக நடந்து கொள்வது எனக்கு உடன்பாடான காரியமல்ல. திருமறை ஆசான் வாசகர்களும் இப்படிப்பட்ட தவறைச்செய்து விடக்கூடாது என்பதில் நான் கவனமாக இருந்து வந்திருக்கிறேன். ஆம், பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில் வெகுவாக மெச்சப்பட்டிருப்பவர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதில் அநீதி இழைத்து விடக் கூடாது என்பதற்காகவே, கடந்த 11 ஆண்டுகளாக, வருடத்திற்கு ஒரு மாதத்தை ஒதுக்கி வருகிறேன். ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் பழைய, புதிய ஏற்பாடுகளின் பக்கங்களில் மறைந்து மாசுபடிந்து, மங்கியிருப்பவர்களைக் கண்டறிந்து, தூசுதுடைத்து, மெருகேற்றி, பளிச்சென மின்னிடும் மாணிக்கங்களாக உங்கள் கண்முன் நிறுத்தி வந்திருக்கிறேன். அவர்களில் தனிமனிதரும் உண்டு(2சாமு 23;11,12) குடும்பத்தாரும் உண்டு(II ராஜ 10 ஆதி) ஓர் ஊராரும் உண்டு (யோவான் 4;39 42) நீங்களும் அவர்களை ஆஹா என்று ஏற இறங்கப் பார்த்து வேதாகமத்தில் இப்படியும் ஒருவன் இருக்கிறானா என்று கேட்டு மனமாரப் பாராட்டினீர்கள். அச்சீரிய வரிசையில் இவ்வருடம் இடம்பிடித்து உங்களுக்குப் பாடம் கொடுக்கக் காத்திருப்பவன் தான் இந்த அரண்மனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியா.

தீர்க்கன் ஒபதியா உட்பட வேதாகமத்தில் குறைந்தது 12 ஒபதியாக்கள் உள்ளனர். இவர்களெல்லாரிலும் இந்த அரண்மனை விசாரிப்புக்காரன் ஒரு பொருள் செறிந்த பாத்திரம். ஆகவே தான், இம்மாதத்திற்காக, இவ்வருடத்திற்காக இவனைத் தெரிந்து கொண்டேன். இவன், நிச்சயமாகவே நமக்குப் பாடம் கற்றுக்கொடுக்கத் தகுதியானவன் என்பதை நீங்களும் ஒருவாறு ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன். இவனுக்குள்ளாக நாம் செல்லுவதற்கு முன்பாக, இவன்பற்றிய பின்னணிக் காரியங்களைக் கொஞ்சம் அலசி விடுவோம்.

சாலொமோன் ராஜாவுக்குப் பிறகு ராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிளவுபட்டுப் போனதை நாம் அறிவோம். வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலை 19 ராஜாக்கள் ஆண்டனர். அவர்களில் 7ம் ராஜாவாகப் பொறுப்பேற்றவன் உமரியின் குமாரனாகிய ஆகாப், இவன் தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தவன் (1 ராஜா 16:30) இவனுக்கு வாய்த்த மனைவி யிருக்கிறாளே அவள் ஒரு மத வெறிபிடித்த இரத்தப் பிரியை.

பெண்ணுக்குரிய எந்த லட்சணமும் அவளிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இவர்களுடைய அரண்மனையிலே விசாரிப்புக்காரனாக இருந்தவன் தான் இந்த ஒபதியா. வகித்த பொறுப்பு நல்லதாக இருந்தாலும், அவன் இருந்த சூழ்நிலையை எண்ணிப்பார்த்தால் பயமாக இருக்கிறது. இருப்பினும் அவன் முற்றிலும் வேறுபட்ட, தேவனுக்குகந்த ஒரு வாழ்க்கையை நடத்தியிருக்கிறான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். (I. ராஜா 18:1-14)

ஒரு கட்டத்தில் ஆகாப் ராஜாவின் காரியங்களும் அவனை ஆட்டிவைத்த அவன் மனைவி யேசபேலின் காரியங்களும் அத்துமீறி போகும்போது தேவன் செயல்படத் துவங்கினார். எப்போதும் ஒரு எல்லை மட்டும் அமைதி காக்கும் நமது தேவன், நிலைமை சீராகாமல் போகும்போது, தான் யார் என்பதைத் தவறாமல் காட்டுகிறார். ஆகாப், யேசபேல் விஷயத்திலும் இதுதான் நடந்தது. தேவன் தன் தாசனாகிய எலியாவின் அறிவிப்பின் மூலம் மூன்று வருஷம் மழையை நிறுத்தினார். தேசமெங்கும் வறட்சி, கடுமையான பஞ்சம். இச்சமயத்தில் தான் கர்த்தருடைய வாக்கின்படியாக எலியா யோர்தானுக்கு எதிரே இருந்த கேரீத் ஆற்றண்டைக்குப் போனதும் (I.ராஜ 17:1-5), அங்கே தண்ணீர் வற்றினபோது மீண்டும் கர்த்தருடைய வாக்கின்படியாக சாறிபாத் ஊர் விதவையிடம் போய் தங்கியிருந்து பராமரிப்பு பெற்றதும் நடந்தது. (I. ராஜ 17:9)

பிறகு மூன்றாம் வருஷமாகையில் தேவன் தேசத்தில் மழையை கட்டளையிட எண்ணி நீ போய் ஆகாபுக்கு உன்னை காண்பி என்று எலியாவிடம் சொன்னார். அப்பொழுது சமாரியாவில் பஞ்சம் கொடிதாயிருந்தது. ஆகாப் ராஜாவும், அரமனை விசாரிப்புகாரனாகிய ஒபதியாவும் இப்பஞ்சத்திற்கு என்ன செய்வதென்று ஆலோசனை செய்து, கடைசிக்கு குதிரைகளையும்,கோவேறு கழுதைகளையும் காப்பாற்று வதற்குப் புல் அகப்படுமா என்று தேசத்தை சுற்றிப்பார்க்க ஆளுக்கொரு பக்கமாய் புறப்பட்டுப் போனார்கள். (I. ராஜா 18: 15) தந்தத்தால் செய்யப்பட்ட மாளிகையில் குடியிருந்த ஒரு ராஜா, கழுதைக்குப் புல் தேடப் புறப்பட்டான் எனும் போது, பஞ்சத்தின் தன்மையைக் கற்பனை செய்து பாருங்கள். இவைகளெல்லாம் எதினாலே வந்தது? தேவனுக்கு விரோதமாகச் செயல்பட்டதின் விளைவு தான்.

இதே வேதபகுதி, நம் ஒபதியா பற்றி, ஒருவேளை அவன் தேவனுக்கு எதிராக செயல்படுகின்ற ஒரு ராஜாவின் அரண்மனையில் விசாரிப்புகாரனாக இருந்தாலும், வெகு நேர்த்தியாகப் பேசுகிறதென்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது. ''... ஒபதியா **கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான்.** யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களை

கெபிக்கு ஐம்பது, ஐம்பது பேராக ஒளித்து வைத்து, அவர்களுக்கு அப்பமும், தண்ணீரும் கொடுத்து அவர்களைப் பராமரித்து வந்தான்''. (I. ராஜா : 18: 3,4)

சரி, புல் தேட ஆகாப் ராஜாவும், ஒபதியாவும் போன போது வழியில் எலியா எதிர்ப்பட்டான். அப்பொழுது அவன் இன்னான் என்று அறிந்து, **முகங்குப்புற விழுந்து,** நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா என்று மரியாதை செலுத்தினான். (I. ராஜா : 18:7) மரியாதையை ஏற்றுக்கொண்ட எலியா, ''இதோ எலியா வந்திருக்கிறான்'' என்று உன் ஆண்டவனக்குச் சொல் என ஒபதியாவிடம் சொன்னான். (18:8), அப்பொழுது தான், முகங் குப்புற விழுந்து மரியாதை செய்த ஒபதியா, எலியாவின் சொல்லுக்கு உடனடியாகக் கீழ்ப்படியவில்லை. மாறாக, உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். இப்போதும் நான் போய் உம்மை கண்டதாகச் சொன்னபின்பு, ஆவியானவர் உம்மை நான் அறியாத இடத்திற்குக் கொண்டு போய்விட்டால், ஆகாப் என்னைக் கொன்று போடுவானே என்றான் (I. ராஜ 18:18-12)

இங்கே ஒபதியாவின் காரியத்தைக் கவனித்தால், அவன் எலியாவின் வார்த்தைகளை எதிர்க்கவில்லை. கீழ்ப்படியமாட்டேன் என்று அடம் பிடிக்கவில்லை. அதே நேரத்தில் உடனடியாக ஏற்றுக் கொள்ள வுமில்லை. எலியா சொல்வது சரிதானா என்று ஒரு வாதத்தை முன்வைத்து, காரியத்தை உறுதி செய்து கொள்ள முயற்சித்தான். அந்த உரையாடலின் முடிவில், **''அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.''** என்று எலியா சொன்னவுடன் அதற்கு மேல் ஒன்றும் பேசாமல், **உடனடியாய் புறப்பட்டு போய்,** எலியா சொன்னபடி அதை ஆகாப்புக்கு அறிவித்தான். (18:13,16)

அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியா குறித்து நமக்குக் கிடைத்திருக்கும் இந்த பின்னணிக் தகவல்களைக் கொண்டு, அவன் மூலம் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I. ஒபதியா கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவனாயிருந்தான் ( 18:3,12)

அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல்பாடம், அவன் கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான் என்பது.

இவன் மட்டும் தானா கர்த்தருக்குப் பயந்து நடக்கிற வனாயிருந்தான், இன்னும் ஏராளமானவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடந்துள்ளதாக வேதாகமத்தில் உள்ளதே என்று நீங்கள் கூறக்கூடும். உண்மைதான், ஆபிரகாம் (ஆதி 22:12), யோசேப்பு (ஆதி42:18), நெகேமியா (5:15), போன்றவர்களும், இன்னும் அநேகரும் கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்துள்ளார்கள். ஆனாலும், இவர்கள் யாருக்கும் இவனைப் போன்றதொரு சூழ்நிலை இருந்ததாகத் தெரியவில்லை. நன்றாக எண்ணிப் பாருங்கள். ஒரு தேசத்து ராஜா கர்த்தருக்கு விரோதமானவன். அவன்

மனைவியோ கர்த்தருக்கும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கும் எதிராகப் போரிட்டு கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்கிறவள். இவர்களிவரும் அமர்ந்து தேசத்தைக் கோலோச்சும் இடம் தான் அரமனை. அந்த அரமனையின் விசாரிப்புக்காரன் தான் ஒபதியா. இவன் கர்த்தருக்குப் பயந்து நடப்பது வெளிப்படையாகத் தெரிந்திருக்குமானால் என்ன நடந்திருக்கும்?. தங்களுடைய நம்பிக்கைக்குத் துரோகம் இழைத்த இவன் ஒரு நாழிகை கூட இருக்கக் கூடாதென்று தீர்ப்புச் செய்து உடனடியாகவல்லவா கொலை செய்யப்பட்டிருப்பான். அப்படித்தானே

ஆனால் அருமையானவர்களே, இந்த ஒபதியா தேவனுக்குப் பயப்படுகிற காரியத்தில் தன் சூழ்நிலையைக் காரணமாகக் காட்டி நம்மைப்போல தப்பித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. நம்மில் அநேகர் எப்படி ? வேதத்தைத் தவறாமல் வாசிப்பதில், அன்றாடம் ஜெபிப்பதில், வாரந்தோறும் ஆராதிப்பதில், கர்த்தருக்குக் கொடுப்பதில், ஒரு கிறிஸ்தவனாக வாழ்வதில் நம்முடைய சூழ்நிலையைக் காரணமாகக் காட்டுகிறோம். என்னுடைய குடும்பச் சூழ்நிலை அப்படி, நான் வேலை செய்யும் இடத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாது, என் கிராமத்துச் சூழ்நிலைபற்றி உங்களுக்குச் சொன்னாலும் புரியாது, எங்கள் பகுதிக்கு நீங்கள் ஒருமுறை வந்து பார்த்தால் தான் விளங்கும் என்று இப்படியே அடுக்கிக்கொண்டு போவோம். இந்த ஒபதியா நம்மைப் போல தப்பிக்கக் காரணம் காட்ட விரும்பியிருந்தால் படுஜோராகக் காட்டியிருக்க முடியும். ஆனால், சூழ்நிலையைக் காரணமாகக் காட்டி தன் பக்திக்குப் பாடைகட்ட அவன் முயற்சிக்காமல், தேவனுக்குப் பயப்படும் காரியத்தில் தான் என்ன செய்ய வேண்டுமென்பதை உணர்ந்து அதற்கேற்றாற்போல் பக்குவமாக, தேறினவனாக நடந்து காட்டியுள்ளான்.

தேவனுக்கு உகந்தவனாக வாழ விரும்புகிற ஒருவனுக்கு தேவ பயம் அவசியம். அவருடைய வழிகளில் நடந்து, பாக்கியவானாயிருக்க, விரும்புகிறவனுக்கு தேவபயம் அத்தியாவசியம் (சங்.128:1). அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள விரும்புகிறவனுக்கு தேவபயம் முக்கியம் (பிர. 12:13).

தேவ பயம் என்று சொல்லும்போது, ஏதோ தேவனை நினைக்கும் போதும், அவருடைய சமூகத்தைத் தேடும்போதும் பயந்து நடுங்குவதல்ல. இதற்கான விளக்கத்தை தேவன் ஞானி சாலமோனைக் கொண்டு எப்படிக் கொடுக்கிறார் பாருங்கள். **''தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்''** கர்த்தருக்குப் பயப்படுகிறவன் தீமையை வெறுக்கிறவனாக இருக்க வேண்டும். ஆம், அப்படியானால், தீமை என்பது எது? இதற்கான விளக்கத்தையும் தேவன் மீகா தீர்க்கனைக் கொண்டு கொடுத்துள்ளார். ''**மனுஷனே, நன்மை இன்னதென்று தேவன் உனக்கு அறிவித்திருக்கிறார்**''. என்று (மீகா. 6:8). அப்படியானால், தேவனால் அறிவிக்கப்படாத எல்லாமே தீமை தான். இன்னும் அதாவது, வசனத்தின்

அங்கீகாரம் பெறாத எல்லாமே தீமை தான். அது, குழந்தை ஞானாஸ்நானமாக இருந்தாலும், பண்டிகைக் கொண்டாட்டமாக இருந்தாலும், ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துகிற செயலாக இருந்தாலும் எல்லாமே தீமை தான். தேவனுக்குப் பயப்படுகிற ஒருவன் இவைகள் அனைத்தையும் விட்டு விலகியாக வேண்டும்.

## II ஒபதியா, எஜமான விசுவாசத்திற்கும் தேவபக்திக்கும் உண்டான வேறுபாடு தெரிந்தவனாயிருந்தான். (18:4)

அரமனை விசாரிப்புகாரனாகிய ஒபதியாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், தேவபக்திக்கும், எஜமான விசுவாசத்திற்கு முண்டான வேறுபாடு தெரிந்த ஓர் உன்னத வாழ்க்கை வாழ்ந்தான் என்பது.

தேவ காரியத்தில் எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்றதொரு தெளிவற்ற நிலையே மார்க்க உலகில் காணப்படுகிறது. நம்முடைய இரட்சகர் வாழ்ந்த நாட்களில் கூட யாருக்கு எதைச் செலுத்த வேண்டுமென்று தெரியாமல், அவரை அணுகியபோது, இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று தெளிவுபடுத்தினார் (லூ.20:25). ஆனால், இந்த உண்மையை ஒபதியா பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே அறிந்து, கனகச்சிதமாகத் தன் பக்தி வாழ்க்கையை நடத்தியுள்ளான் என்று தெரிகிறது.

ஆம், அவன் தன் எஜமானுக்கு உண்மையாகவும், தேவனிடத்தில் பக்தியாகவும் நடந்து ஒரு பெரிய சாகசமே புரிந்துள்ளான். எப்படியெனில், ஒரு ராஜாவின் கீழாக நூற்றுக்கணக்கானவர்கள் பணிபுரிந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் எல்லாரிலும், நம் ஒபதியாவை அரமனை விசாரிப்புக்காரனாக ஆகாப் ராஜாவும், சூத்திரதாரி யேசபேலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியானால், இவன் அவர்களுக்கு எவ்வளவு உண்மையானவனாக, நம்பிக்கைக்கு உகந்தவனாக இருந்திருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள். அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு தேவன் வேலைக்காரருக்குக் கொடுத்த ஆலோசனையாகிய, ''வேலைக்காரரே நீங்கள் கிறுஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும், பயத்தோடும், நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து, மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியம் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்''. (எபே. 6:5,6)என்று சொன்னதின் கருத்து, ஏற்கனவே இவனுக்குத் தெரிந்திருக்கிறது. எஜமான விசுவாசத்தில் எவ்வளவு தேறினவனாக இருந்துள்ளான் பாருங்கள்.

ஆனால், அதே நேரத்தில் எஜமானா, தேவனா என்ற நிலை வந்தபோது, தேவன் பக்கம் உறுதியாக நின்று செயல்பட்டுள்ளான். தன் எஜமானி யேசபேல், கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தபோது, அதைத் தான் நேரடியாக எதிர்க்க முடியாவிட்டாலும், என்னால் ஒன்றும் செய்ய முடியாதென்று முடங்கி மூலையில் உட்கார்ந்து விடாமல், தன்னால் தேவனுக்கு என்ன செய்யமுடியுமோ அதைச் செய்துள்ளான். ஆம், 50 பேராக இரண்டு கெபிகளில் 100 பேரை ஒளித்து வைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்துப் பராமரித்துள்ளான். (18:4). கொடிய பஞ்ச நேரத்தில், இப்படி 100 பேருக்கு அப்பமும், தண்ணீரும் கொடுப்பது எவ்வளவு சிரமம் என்பது நம்மால் விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றல்ல. இது, தேவமனிதர்கள் எப்படியாவது காப்பாற்றப் படவேண்டுமென்ற இவன் வாஞ்சையையே நமக்குக் காட்டுகிறது. 100 பேரைப் பராமரிப்பது வெளியே தெரிந்தால் தான் நிச்சயமாகக் கொல்லப்படுவோம் என்பது தெரிந்தே இக்காரியத்தைச் செய்துள்ளான். இது, தன் தேவ பக்திக்காக எந்தத் தியாகத்தையும் செய்ய இவன் தயாராயிருந்ததையே அறிவிக்கிறது.

தன் பக்திக்கடுத்த காரியத்தில் எஜமானை எந்த இடத்தில் வைப்பது, தேவனுக்கு எப்படிப்பட்ட இடத்தைக் கொடுப்பது என்பதில் இவனுக்குத் தள்ளாட்டமோ, தடுமாற்றமோ இருக்கவில்லை. நாமெல்லாம், நம்முடைய பக்தி விஷயத்தில் நம்முடைய பெற்றோரை, நண்பர்களை, உறவுகளை, ஊராரை, வேலை கொடுக்கும் முதலாளிகளை, சார்ந்திருக்கும் அரசாங்கத்தை எந்த இடத்தில் வைப்பதென்றும், தேவனுக்கு எப்படி முதலிடம் கொடுப்பதென்றும் தெரியாமல் தடுமாறிக்கொண்டு தானே உள்ளோம். ஒபதியாவிடமிருந்த தெளிந்த நிலை நமது பக்தி வாழ்விலும் காணப்பட வேண்டும்.

அருமையானவர்களே, தெளிவு மாத்திரமல்ல, நம்முடைய ஒபதியாவிடம் தேவனுக்கடுத்த காரியத்தில் ஞானமும் இருந்தது. கர்த்தரின் தீர்க்கதரிசிகள் 100 பேரையும் ஒரே இடத்தில் ஒளித்து வைக்காமல் 50, 50 பேராக இரண்டு ஒளித்து வைத்தான். ஏன்? என்ன காரணம்? ஒருவேளை தன் செயல் வெளியே தெரிந்து யேசபேல், ஓரிடத்தில் ஒளித்து வைத்திருப்பவர்களைக் கொன்றாலும், இன்னொரு இடத்திலுள்ள 50 பேராகிலும் தப்புவார்களே என்ற எண்ணம் தான். எப்படிப்பட்ட முன் யோசனை பாருங்கள். எப்படியாவது, என் தேவனுடைய தாசர்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலும் என் தேவனுடைய நாமத்தை அறிவிக்கிறவர்கள் தேசத்தில் இல்லாமல் போய்விடக் கூடாதென்பதிலும் தான் எவ்வளவு அக்கறை. ஆக நாமும் இந்த ஒபதியா போல, நம்முடைய பக்தி வாழ்க்கையில் தெளிவு ள்ளவர்களாகவும், ஞானமுள்ளவர்களாகவும் நடந்து கொள்ளுவோம்.

### III. மரியாதைக்கும், கீழ்ப்படிதலுக்குமான வேறுபாட்டை அறிந்து வைத்திருந்தான் (10-16)

அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், அவன் மரியாதைக்கும், கீழ்ப்படிதலுக்குமான வேறுபாடு தெரிந்தவனாயிருந்தான் என்பது.

இன்றைய கிறிஸ்தவ உலகை உற்று நோக்கினால், மரியாதைக்கும், கீழ்ப்படிதலுக்குமான வித்தியாசம் தெரியாத ஒரு நிலையே காணப்படுகிறது. மரியாதைக்குரியவர்களாகத் தெரிபவர்கள் என்ன சொன்னாலும் அதைச் செய்ய வேண்டுமென்ற நிலையே காணப்படுகிறது. ஒருவேளை, உலகக் காரியங்களில் இது சரியாக இருந்தாலும் கண்டிப்பாக ஆன்மீக காரியங்களில், சரியாக இருக்க முடியாது. ஒருவர் மரியாதைக்குரியவராக இருக்கிறார் என்பதற்காக, அவர் சொல்வதற்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என்பதை ஒபதியா அழகுற எடுத்துச் சொல்வதை கவனியுங்கள்.

புல் தேடிப்போன ஒபதியா, எலியாவைக் கண்ட மாத்திரத்தில் **முகங்குப்புற விழுந்து** மரியாதை செலுத்தினான் (18:7) ஆனால், அடுத்த வசனத்தில் **நீ போய் ஆகாபுக்குச் சொல்** என்ற போது, அந்த வார்த்தையை உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. எலியா சொன்ன காரியங்கள் யதார்த்த நிலைக்கு ஒவ்வாததாக இருந்ததால், அதைக் குறித்து தனது ஐயப்பாட்டை எடுத்துக்காட்டி, உண்மை நிலையைச் சுட்டிக்காட்டி, அது சம்பந்தமாக விளக்கம் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறான். ஐயோ, இவர் ஒரு பெரிய தீர்க்கதரிசியாயிற்றே, அற்புதங்களைச் செய்கிற மனிதராயிற்றே, மரியாதைக்குரிய தேவதாசராயிற்றே இவரிடம் போய் நாம் எப்படி விளக்கம் கேட்பது, அப்படி விளக்கம் கேட்கப் போய் அவர் ஏதாகிலும் நினைத்துக் கொண்டால் எப்படி என்றெல்லாம் கவலைப் படவில்லை. மரியாதை கொடுப்பது சரி என்று எண்ணினான், முகங்குப்புற விழுந்தான். ஆனால், அதற்காக அவர் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆனால், தன்னுடைய உரையாடலின் இறுதியில், கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்ற போது, உடனடியாகப் போனான். ஆம், **கர்த்தருடைய வார்த்தை என்று தெரிந்த போது, உயிரைப் பணயம் வைத்து தன் கீழ்ப்படிதலைக் காட்டினான்.**

அருமையானவர்களே, நம்முடைய நிலை இக்காரியத்தில் எப்படி உள்ளது? மரியாதைக்கும், கீழ்ப்படிதலுக்குமான வேறுபாட்டை அறிந்த ஒரு வாழ்க்கையை ஒபதியா போல், நம்முடைய பக்தி வாழ்க்கையில் நடத்திக் கொண்டிருக்கிறோமா? ஆன்மீக உலகில், மரியாதைக் குரியவர்களாகத் தெரிகிற பாஸ்டர்கள், குருமார்கள், ஆயர்கள், திருச்சபைத்தலைவர்கள் போன்றவர்கள் சொல்வதற்கெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு தலையை ஆட்டுகிறோமா? சொல்லுங்கள். தலையாட்டி கீழ்ப்படிவது தான் நியாயம் என்றால் எலியா சொன்னதற்கு ஒபதியா ஏன் கீழ்ப் படியவில்லை?

அப்படிக் கீழ்ப்படியாததை வேதாகமம் ஏன் கண்டிக்க வில்லை? விளக்கம் கேட்பது தவறு என்றால், விளக்கம் கேட்ட ஒபதியா ஏன் எலியாவால் கடிந்து கொள்ளப்படவில்லை? நம்மிடத்தில் பேசுவது, நமக்குப் பிரசங்கிப்பது யாராக இருந்தாலும், அவர்கள் பேசுவதும், பிரசங்கிப்பதும் சத்தியத்திற்கு மாறாக இருந்தால் விளக்கம் கேட்க வேண்டும். மரியாதை என்ற பெயரில் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, **எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்** (1தெச. 5:21) என்றே தேவன் சொல்லியுள்ளார்.

ஆனால், இங்கே எலியாவிடம் விளக்கம் கேட்ட ஒபதியா, **கர்த்தரின் வார்த்தை** என்று தெரிந்த பிறகு எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. **தீர்க்கன் எலியா என்ன சொல்லுகிறார் என்பதைக் காட்டிலும், கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்பதில் கவனமாக இருந்தான்.** ஆகவே, கர்த்தரின் வார்த்தை என்று தெரிந்தவுடன், **அவன் என்னைக் கொன்று போடுவானே (18:12) என்று ஒரு கட்டத்தில் சொன்ன ஒபதியா,** என்னைக் கொன்று போட்டாலும் பரவாயில்லை என்று கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். எவ்வளவு பெரிய பக்தன் பாருங்கள்.

அன்பானவர்களே, நாமும் கூட நம்முடைய பக்தி வாழ்க்கையில், இந்த ஒபதியா போல் தான் இருக்க வேண்டும். மனிதன் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் அதுபற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. தேவன் என்ன சொல்லுகிறார் என்பதே முக்கியம். தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறதென்றே நாம் கவனிக்க வேண்டும். ஒரு சமயம் ஆலோசனை சங்கத்துக்கு முன்பாக பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப். 5:29) என்றார்கள். தேவனுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிவது ஏன் அவசியமானது? ஏனெனில், அவருடைய வசனங்களே நம்மை இறுதிநாளில் நியாயந்தீர்க்கப்போகிறது (யோவா. 12:48). அங்கி அணிந்திருப்பவர்களும், ஜிப்பா போட்டிருப்பவர்களும், கோட்டு சூட்டு மாட்டிருப்பவர்களும், ஏன் காவி உடுத்தி, அதற்குத் குதர்க்க விளக்கம் கொடுப்பவர்களும் நம்மைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கமாட்டார்கள் என்பது நினைவில் இருக்கட்டும். வசனத்தின் மேன்மையை உணர்ந்தபடியால் தான், எபேசு பட்டணத்து மூப்பர்களுடன் பேசும் போது, ''கிருபையுள்ள வசனத்துக்கு உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்'' என்றான். (அப். 20:32).

ஆக, இந்த அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியா நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்களை நம்முடைய வாழ்க்கையில் ஏற்று நித்திய பலனைப் பெறுவோமாக! ஆமென்!!

**EZSR**

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள்!

## காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்
## எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்
இணைந்து நடத்தும்

# எட்டாம் வேதாகம கருத்தரங்கம்
# EIGHTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 11,12-2005**
**செவ்வாய், புதன் (அரசு விடுமுறை நாட்கள்)**

நேரம் : **தினமும் காலை 9.00-12.30 மணி வரை**
**மாலை 2.00 - 5.00 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

பேச்சாளர்கள் : **தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

**தொடர்பு முகவரி :**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# பரலோகத்திற்கு ஒரே வழி இருப்பது ஏன்?

இன்றைய மத உலகில், "பரலோகத்திற்கு பல வழிகள் உண்டு", "நாம் எல்லாரும் பல வழியில் பயணிக்கிறோம். ஆனால் ஒரே இடத்திற்கு போய்ச் சேருவோம்" என்று கூறப்படுவதை நாம் கேள்விப்படுகிறோம். இதை நாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது நல்லது போலவே தெரியும், ஆனால் இவைகளை ஆழ்ந்து சிந்தித்தால் வேதாகமத்திற்கு இவை அந்நியமானவை என்பது விளங்கும்.

பரலோகத்தைப் பற்றியும், அது எவ்வளவு அழகானது என்பது பற்றியும், அது கர்த்தருடைய ஜனங்களுக்காக ஆயத்தமாகிற இனிவரும் உலகமாயிருக்கிறது என்றும் வேதாகமம் நமக்கு விளம்புகிறது. இயேசுவானவர் "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1-3) என்கிறார். ஆகவே, இயேசுவை விசுவாசிக்கிற யாவரும், அவர் ஆயத்தம் செய்யும் பரலோகத்தின் மேல் விசுவாசம் வைத்திருக்கிற யாவரும் அங்கு போக வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ஆனால், கேள்வி யாதெனில் நாம் அங்கே எப்படி போக முடியும்? அங்கு போவதற்கு ஒரு வழி தான் உண்டா? அல்லது பல வழிகள் உண்டா?

மறுபடியும் இயேசுவானவர், "..... நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6) இயேசுவே வழியாகவும், பிதாவினிடத்தில் போகும் ஒரே வழியாகவும் இருக்கிறார். அவரை அல்லாமல் பிதாவினிடத்தில் ஒருவனும் போய் சேர முடியாது. இயேசு தன்னை மேய்ப்பராகவும், கிறிஸ்தவர்களை ஆடுகளாகவும், சபையை மந்தையாகவும் விவரிக்கிறார். இப்பொழுது இயேசுவானவர் வாசலைப்பற்றி என்ன சொல்கிறார் என்பது பற்றி கவனியுங்கள். ".... நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 10:7) இயேசு தொடர்ந்து அதை விளக்குகிறார்,

“நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான் அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்” (யோவான் 10:9) இன்னும் அவர் “மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல் வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். (யோவான் 10:1) என்றார்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், மந்தைக்கு இயேசு ஒருவரே வாசல் என்றும், சபைக்கும், பரலோகத்திற்கும் அவர் ஒருவரே வழி என்றும் சொல்லுகிறார். அதுமாத்திரமல்ல, வாசல் வழியாய் வராமல், வேறு வழியாக வருகிறவன், அல்லது வர முயற்சிக்கிறவன் கள்ளனும், கொள்ளைக் காரனுமாயிருக்கிறான் என்று கருதப்பட வேண்டும். ஆனால், கள்ளனும், கொள்ளைக்காரனுமாயிருக்கிறவர்களுக்கு முடிவில் என்ன நடக்கும்? அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, அப்படிப்பட்டவன் தேவனுடைய ராஜ்ஜியத்தில் அதாவது, சபையில் அல்லது பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. அதாவது அவர்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனுக்கு கீழ்ப்படிந்தாலொழிய அப்படி பிரவேசிக்க முடியாது.

இன்னொரு சமயத்தில், தன்னை சுற்றி கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து இயேசு, “இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்” (மத்தேயு 7:13,14) என்கிறார். இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்க வேண்டுமென்று எல்லாரையும் இயேசு ஊக்கப்படுத்துகிறதைப் பாருங்கள். இந்த இடுக்கமான வாசல் கிறிஸ்துவைக் குறிக்கும், சபைக்குள் போக அவரே வழி, அங்கிருந்து பரலோகத்திற்குள் போக அவர் தான் வழி. இந்த இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிக்கிறவன் நெருக்கமான வழியைக் கண்டடைகிறான் அது அவனை பரலோகத்திற்கு நேராக வழி நடத்தும். இந்த இடத்தில் நாம் காணுவது, ஒரே வாசல், ஒரே வழி, அந்த ஒரே வழி தான் பரலோகத்திற்கு நம்மை வழி நடத்தும். யார் அந்த வழியில் நடக்க முடியும்? கிறிஸ்துவை விசுவாசித்து, கர்த்தருக்கு கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் தேவ பக்தியுடையோர், நீதிமான்கள், பரிசுத்தவான்கள், கிறிஸ்துவுக்கு உண்மையாக இருப்பவர்கள் இதை தவிர வேறு யாராவது இந்த இடுக்கமான வாசால் வழியாக நடக்க முடியுமா? இல்லை.

கிறிஸ்து மறுபக்கத்தையும் குறித்துப் பேசுகிறார். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமாயிருக்கிறது என்கிறார். அதில் யார் பிரவேசிக்க துணிவார்? அநேகர், உலகத்தார், தேவ பக்தி இல்லாதவர். கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாமல், தங்கள் சுயபுத்தியின் மேல் சாய்ந்து நடக்கிறவர்கள். விசாலமான வாசல் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் மனிதனால் கட்டப்படும் சபையில் சேருகிறவர்கள், மனித நாமத்தை தரித்துக் கொள்ளுகிறவர்கள். அவர்கள் இஷ்டப்படி ஆராதிக்கிறவர்கள். அவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்கள், மற்றவர்களையும் வஞ்சிக்கிறவர்கள். உண்மையில்லாத கிறிஸ்தவர்களும் இதில் அடங்குவார்கள். இந்த வழி, சாலை நம்மை எங்கு கொண்டு போய் விடுகிறது? நித்திய அழிவுக்கு. ஓ, ஆம், அநேகர் நேர்மையும் உண்மை உள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் பக்தியுள்ளவர்களாயிருப்பார்கள் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் அவர்கள் இழந்து போவார்கள், ஏனெனில் அவர்கள் விசாலமான பாதையில் இருக்கிறார்கள்.

என் நண்பர்களே, ஒரு நாட்டின் தலைநகருக்கு அநேக வழிகள் இருக்கலாம், ஆனால், ஒருவர் உங்களோடு, இந்த பாதையில் தான் நீங்கள் போகவேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கும்போது, நீங்கள் வேறு பாதையை தேர்ந்தெடுப்பீர்கள் என்றால் என்ன நடக்கும்? நீங்கள் பிரச்சினைக்குள்ளாவீர்கள். அப்படித்தானே! அது போலத் தான், கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28:18-20) கர்த்தரின் வல்லமையையும், அதிகாரத்தையும் ஏற்று அதற்கு கீழ்ப்படியும் போது, நாம் சீரான ஓர் பாதையில் நடக்கலாம். அப்படிச் செய்வதற்கு கர்த்தர் கட்டளையிட்ட ஒரே வழியாகயிருக்கும் கிறிஸ்துவில் நாம் நடக்க வேண்டும்.

பரலோக பாதையை பற்றி நாம் பேசும்போது நமக்கு வரும் பிரச்சினை என்னவென்றால், அதை நம்முடைய மனுஷிக சிந்தையோடு அணுகுவதுதான். ஒரு பட்டணத்திற்கு போக பல வழிகள் உண்டு, எந்த வழியில் போனாலும் அந்தப் பட்டணத்திற்கு போக முடிகிறது, அப்படியானால், ஆவிக்குரிய விஷயங்களிலும் இந்த விஷயம் பொருந்தி வரும் அல்லவா என்ற மனுஷிக எண்ணம் நமக்கு வருகிறது. ஆனால் கர்த்தரையும், அவருடைய வழியையும் பார்க்கையில், ஒரே வழிதான் உண்டு என்பது உறுதி. வேறு அநேக வழிகள் இருப்பது போல தோன்றுகிறது. ஆனால் அவைகள் எல்லாம் பரலோகத்திற்கு நம்மை கொண்டு சேர்க்காது. மனிதனால் உண்டாக்கப்பட்டிருக்கும் இந்த வழிகளாலும், அமைப்பு களினாலும் ஒருவனும் பரலோகத்திற்கு போக முடியாது. நாம் செய்

வேண்டியதெல்லாம் நமது வேதாகமத்தை வாசிக்க வேண்டும். இயேசுவானவர் சொன்னார், "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்" (மத். 15:9) இன்னுமாக "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்ததாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார் (மத்தேயு 7:21-23) இதே போன்ற வசனங்கள் அநேகம் வேதாகமத்தில் இருக்கிறது. இப்பொழுது நாம், தேவனுக்கு கீழ்ப்படியாமல், காரியங்களை நம் வழியில் செய்துவிட்டு மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயரை தரித்துக்கொண்டு நமக்கு இஷ்டமான ஆராதனை செய்து, பல வழிகளில் நடந்து கொண்டு பரலோகம் போக முடியும் என்று ஒரு நிமிடம் கூட சிந்திக்க முடியுமா? நாம் அப்படி நினைத்தால் நிச்சயமாகவே தவறு செய்கிறோம்.

எனக்கன்பானவர்களே! சவுலைப் பாருங்கள். அவன் பக்தியுள்ள மனுஷன், அவன் தன் மார்க்கத்திற்காக மிகவும் வைராக்கியம் பாராட்டினவன் அவன் சபையை துன்பப்படுத்திய போதிலும் அவனுக்கு நல்மனசாட்சியிருந்தது, ஆனால், அவன் செய்து கொண்டிருப்பது தவறு என்பதை கண்டு கொண்டான். அவன் தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி. கர்த்தருக்கு கீழ்ப்படிந்த போதுதான் அவன் இரட்சிக்கப்பட்டான். (அப். 9:22) கொர்லேலியுவைப் பற்றியும் அவன் வீட்டாரைப் பற்றியும் என்ன? அவர்களும் நல்ல மக்கள் தான் அவர்கள் தானதர்மங்களை மிகுதியாகச் செய்து, பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தார்கள். ஆனாலும், பேதுரு பிரசங்கம் பண்ணினதற்குப்பின் அவர்கள் இரட்சிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள கட்டளையிட்டான் (அப்போஸ். 10ம் அதி) பரலோகத்திற்கு ஒரே வழிதான் உண்டு என்பதற்கு வேதாகமத்தில் அநேக வசனங்கள் உண்டு.

என் நண்பர்களே இவைகளை பற்றி சிந்தியுங்கள். வேதாகமம் ஒரே தேவனும், கர்த்தரும் அல்லது இரட்சகரும், பரிசுத்த ஆவியும், சரீரமும்

அல்லது சபையும் ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே நம்பிக்கையும் உண்டு என்று கூறுகிறது. (எபே. 4:1-6) நாம் இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழி அல்லது ஒரே சுவிசேஷம் இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. கர்த்தரும் இரட்சகருமான இயேசு, இரட்சிக்கப்பட எல்லாரும் ஒரே காரியத்தை செய்ய வேண்டும் என்று தான் நமக்கு சொல்லியிருக்கிறார். எல்லாரும் அவரை கேட்க வேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கிறார்கள். (மத். 17:5) அவர் பேரில் விசுவாசம் வைக்க வேண்டும் (யோவா. 8:24) தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் (மத். 10:32) பாவ மன்னிப்புக்காக நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (மத். 16:16; அப். 2:38) உலகம் முழுவதும் இந்த ஒரே சுவிசேஷமே பிரசங்கிக்கப்படவேண்டும் என்றும், உலகத்திலுள்ள எல்லா சிருஷ்டிக்கும் அது பிரசங்கிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கட்டளையிட்டிருக்கிறார் (மற். 16:15,16)

இரட்சிக்கப்படுகிறவர்களை, கர்த்தர் தமது ஒரே சபையில், அவருடைய சபையில், அவர் கட்டின சபையில், எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபையில், அவர் சுய இரத்தத்தினால் சம்பதித்துக்கொண்ட அந்த சபையில், அவர் தலையாயிருக்கிற அந்த சபையில், எந்த சபைக்காக திரும்ப ஒருநாள் வருகிறாரோ அந்த சபையில் சேர்த்துக்கொள்ளுகிறார் (அப். 2:47; மத். 16:16; எபே, 5; அப். 20:28) தேவனை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமென்று வேதம் கூறுகிறது (யோவான் 4:24) ஆகவே, வாரத்தின் முதல் நாளில், சபையாக கூடி வருகையில், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும், காணிக்கை கொடுக்க வேண்டும், தேவனை துதித்து பாட வேண்டும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க்க வேண்டும், ஜெபிக்க வேண்டும். (அப். 20:7; 2 தீமோ 2:15; அப். 2:45; எபே. 5:19) நாம் செய்யும் எல்லாவற்றையும் கர்த்தருடைய நாமத்தினால் செய்ய வேண்டும் என்று வேதம் போதிக்கிறது (கொலோ. 3:17) அப்படி என்றால் நாம் அவருடைய நாமத்தை தரித்துக் கொள்ள வேண்டும் (அப். 11:26)அதுமாத்திரமல்ல, நாம் ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் (வெளி 2:10)

நாம் வாசிப்பதற்கும், விசுவாசிப்பதற்கும், கீழ்ப்படிவதற்கும் ஒரே வேதாகமம் தான் உண்டு. நாம் கர்த்தரை விசுவாசித்து, அவருக்கு உண்மையாயிருந்தால், நாம் போவதற்கு ஒரே பரலோகம் தான் உண்டு. பாவிகளுக்கும், உண்மையில்லாதவர்களும் ஒரே நரகம்தான் உண்டு (மத்தேயு. 25:46)

நாம் மேற்சொன்ன வசனங்கள் எல்லாம் உண்மையாகயிருக்கிறது. அதை நீங்களே வாசித்து தெரிந்து கொள்ளலாம் அப்படி இருக்கையில் பரலோகத்திற்கு பல வழிகள் எப்படி இருக்க முடியும்? ஆம், பரலோகம் செல்ல ஒரு வழி உண்டு, ஒரே வழிதான், அது கர்த்தருடைய வழி. அந்த வழியை நாம் ஏற்றுக் கொள்ள ஞானவான்களாகயிருந்து, அந்த வழியில் நாம் நடக்க தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதை செய்ய வேண்டும். வேறு எந்த வழியிலும் நாம் பரலோகத்திற்கு செல்ல முடியாது. ஞானி சொல்லும் போது, "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி. 14:12) என்கிறார்.

நீங்கள் எந்த வழியில் பயணிக்கிறீர்கள்? விசாலமான வழியா அல்லது இடுக்கமான வழியா? கேட்டுக்குப்போகிற வழியா? அல்லது பரலோகத்திற்குப் போகிற வழியா? ஒரே நேரத்தில் இரண்டிலும் உங்களால் பயணிக்க முடியாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மத். 6:24) ஒன்று நாம் அவருடன் இருக்கிறோம் அல்லது அவருக்கு எதிர்த்து நிற்கிறோம் என்று சொல்லியிருக்கிறார் (மத். 12:30) ஆகவே, நாம் எந்த வழியில் பயணிக்கிறோம் என்பது அவனவன் தேர்ந்தெடுக்கும் ஒன்று. கிறிஸ்துவையும், அவருடைய பரலோக பாதையையும் நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நாங்கள் உங்களிடம் வேண்டுகிறோம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

## ஒரு தகப்பனின் ஜெபம்

**என் நேச தேவனே, மூன்று வயதே நிரம்பிய என் பிள்ளை, தன் இரவு நேர ஜெபத்தை உம்மிடம் வைத்தான். உறக்கத்தால் நிறைந்த அவன் விழிகள் மூடுவதற்கு முன், தன்னை காத்துக்கொள்ளும்படி ஜெபித்தான். நான், இன்னும் அவன் படுக்கை அருகே அமர்ந்தவனாய், தூங்கிய அவன் தலையில் என் கையை வைத்து, மிகுந்த தாழ்மையுடன், என்பிரிய தேவனே, தயவுள்ள என்னை கர்த்தாவே ஒரு நல்ல தகப்பனாய் மாற்றும்படியாய் கெஞ்சுகிறேன். இந்த சிறு பையனை, நான் சரியான, ஒளியான, நேர்மையான பாதையில் நடத்த உதவி செய்யும். அவன் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கை ஒருபோதும் சிதையாதபடி நான் நடக்க கிருபை புரியும். அவன் சிறுபிள்ளையாய் ஒன்றும் அறியாதவனாய், பயமில்லாமல் இதையே தான் உம்மிடம் கேட்டான், நானோ நடுக்கத்துடன் கேட்கிறேன். பிரிய தகப்பனே, தயவுள்ள கர்த்தாவே என்னை நினைத்தருளும் என் ஆண்டவர் இயேசுவின் மூலமாக ஜெபிக்கிறேன்!!**

பெண்கள் பகுதி

# "மனைவி"

சென்ற மாதத் தொடர்ச்சி

**5. மனைவி தெளிந்த புத்தியுள்ளவளாய் இருக்க வேண்டும்**

தெளிந்த புத்தி அவசியம். மூப்பர்களின் தகுதியைப் பற்றி கூறும் போது (தீத்து 1:8) (I தீமோ 3:2) தெளிந்த புத்தியை வலியுறுத்துகிறது. தீத்து 2:2,3 ஆகிய வசனங்கள் தெளிந்த புத்தியின் அவசியத்தை கூறுகிறது. மனைவி தெளிந்த புத்தியுடன் இருந்தால்தான் பிள்ளைகள் அதைப் பார்த்து அதை விட அதிக அளவு தாங்களும் தெளிந்த புத்தியை பெற்றுக் கொள்ள முடியும். தெளிந்த புத்தி இருந்தால்தான் புதிய ஏற்பாட்டு உபதேசமான ஆரோக்கியமான உபதேசத்தை புரிந்து, ஏற்றுக் கொண்டு செயல்பட முடியும்.

**6. மனைவி கற்புள்ளவளாய் இருக்க வேண்டும் :**

கற்பு என்பது பரிசுத்தம். தீமை, அசுத்தம், கறை இவைகளினின்று விலகி, காத்துக் கொள்ளுதல் தான் கற்பு. பரிசுத்தமான மனைவி தீமையினின்று தன்னை காத்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து. குடும்பத்தின் கௌரவத்தை காத்துக் கொள்கிறாள். (Iபேதுரு 3:1:2) ஆகிய வசனங்களில் கற்புள்ள ஸ்திரீ தான் போதனையின்றி நன் நடத்தையினாலே விசுவாசமில்லாத கணவனை ஆதாயப்படுத்திக்கொள்கிறாள்.

**7. மனைவி அன்புள்ளவளாய் இருத்தல் அவசியம் :**

அன்பு ஒன்று மட்டும் தான் மற்றவர்கள் மீது நாம் செலுத்த உதவும் ஒரு மாபெரும் வல்லமை. எல்லோராலும் விரும்பப்படுகிற இந்த அன்பு என்ற குணத்தை ஒரு மனைவிதான் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முடியும். எனவே வேத வசனம் விளக்கும் அன்பை மனைவி ஏற்று அதை நடத்த வேண்டும்.

**8. மனைவி கீழ்ப்படிதலுள்ளவள் :**

நாம் ஏற்கனவே கீழ்ப்படிதலைப் பார்த்தோம் (முதல் கருத்தில்). தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு மனைவி கீழ்ப்படிதலுள்ளவளாய் இருக்க வேண்டும். தூஷிக்கப்படுதல் என்றால் என்ன? வசனத்துக்கு விரோதமாய் நாம் நடக்கும் போது, வசனத்தை விரும்பாதவர்களும் வசனத்திற்கு பகைவர்களும் நம்மைப் பார்த்து இவர்களெல்லாம் வேதம் வாசிக்கிறார்கள்! இவர்களெல்லாம் ஆராதனைக்கு செல்லுகிறார்கள் என்று பேசும் போது அங்கே வேத வசனம் தூஷிக்கப்படுகிறது.

எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் ஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே (ரோமர் 2:24) அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் (II பேதுரு 2:2)

எனவே தூஷிக்கப்பட மனைவிகள் காரணமாக இருக்ககூடாது.

## 9. மனைவிகளின் அலங்காரம் :

ஆபரணங்கள் அணிவதோ, நல்ல உடை உடுத்துவதோ பாவம் அல்ல. (ஆதி 24:22) (நிதி 31:19-24). வேதம் எதை வேண்டாமென்கிற தென்றால் மற்றவர்கள் பார்க்கும்படிக்கு மாத்திரம் இவைகளை அணிந்து கொள்வது, உள்ளான மனிதனுக்கு முக்கியம் கொடுக்காமல் வெளி அலங்காரத்திற்கே கவனம் செலுத்துவது இவைகள் வேண்டாம் என்று வசனம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்துவினிடமிருந்த சாந்தமுள்ள ஆவியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்து தானும் சாந்தமாய் இருந்தார். பிறரிடமும் இதை காட்டினார். அமைதல் என்ற அணிகலனை மனைவி அணிந்து கொள்ள வேண்டும். வஸ்திரத்தைப் பற்றி பேசும் போது அது தகுதியான வஸ்திரம். (I தீமோ 2:9,10) தகுதி என்பது ஒழுங்கான, சரியான முறைப்படுத்தப்பட்ட ஆடைகளை உடுத்த வேண்டும்.

தகுதியற்ற உடை என்பது காமவிகாரம் சம்பந்தப்பட்டது என்று கூறலாம். சுத்தமற்றதாயும், குறைத்து மதிப்பிடக்கூடியதும், அழிந்து போகிறதாயும் இருப்பது தகுதியற்ற வஸ்திரம். அதற்கென்று கணவனுக்கு முன்பாக நல்ல உடைகளை அணிந்து கொள்வது தவறு என்று கூறவில்லை. காரியம் என்னவெனில், தேவ பக்தியுள்ள மனைவி என்ற பெயருடன் எல்லையை மீறும் எந்த உடையையும் தெரிந்து கொள்ளக்கூடாது.

## 10. தேவ பக்தியுள்ள மனைவி :

குணசாலியான மனைவி தேவபக்தியுள்ள மனைவி. தன்னுடைய குணத்தின் மூலம் பலத்தையும், வல்லமையையும் பெற்றவள் தேவபக்தியுள்ள மனைவி. **குணசாலியான ஸ்தீரி தன் புருஷனுக்குக் கீரிடமாயிருக்கிறாள்** (நீதி 12:4). இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் மத் 12:34 ல் வாசிக்கிறோம். தேவ பக்தியுள்ள மனைவியின் இருதயம் ஞானத்தினாலும் சாந்தத்தினாலும் நிறைந்திருக்கிறது. உண்மையான ஞானம் தேவனிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது (யோபு 28:12-28). கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 9:10) தன்னிடத்தில் கேட்கிற யாவருக்கும் தேவன் ஞானத்தைக் கொடுக்கிறார் (யாக் 1:5,6).

சாந்தமுள்ளவளாய் இருக்க வேண்டும். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் சாந்தத்தால் நிறைந்திருக்க வேண்டும்.

தேவ பக்தியுள்ள மனைவி தன் வீட்டுக் காரியங்களை கவனிக்கிறாள் (நீதி 31:10-31). வசனங்களில் குணசாலியான ஸ்திரீயை அழகாக படம் பிடித்துக் காட்டுகிறது. கட்டாயம் ஒவ்வொரு மனைவியும் அனுதினமும் இப்பகுதியை வாசித்தால் தேவ பக்தியுள்ள மனைவிகளாக வாழலாம்.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, வேதாகமம் சித்தரிக்கும் "மனைவி" பற்றி வசன ஆதாரத்தோடே பார்த்தோம். இதை வாசித்து நாமும் கையாளுவோம், பிற ஸ்திரீகளுக்கும் இதைப்பற்றி கூறுவோம். நாமும், நம் குடும்பமும், நாம் சார்ந்திருக்கும் சபையும் பரலோகம் செல்ல நம்மை தயார்படுத்துவோம். ஆமென்.

**- ரேச்சல் ராஜநாயகம்**

## நமது சுமை

ஒரு வருடத்திற்கு நாம் சுமக்க வேண்டிய கஷ்டங்களை எல்லாம் நம்மால் சுமக்கவே முடியாத, குச்சுகளாலான ஒரு பெரிய கட்டோடு ஒப்பிடுகிறேன். ஆனால் தேவன் அக்கட்டை ஒரே நேரத்தில் நாம் சுமக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராக ஒரு நாளைக்கு நாம் சுமக்க வேண்டிய ஒரு குச்சியை மட்டும் தருகிறார். அடுத்தடுத்த நாளைக்குரியதைத் தருகிறார்.

அவர் தருவதை நாம் சுமந்தால் எளிதாய் சுமக்கலாம், ஆனால் நாமோ முந்திய நாளின் குச்சியை இன்றும் சுமந்து கஷ்டத்தை கூட்டுகிறோம். நாம் சுமப்பதற்கு முன்னே நாளைய சுமை எப்படியிருக்குமோ என்று மற்றொரு குச்சியை நமது சுமையோடு நாமே சேர்த்துக்கொள்ளுகிறோம்.

**– ஜான் நியூட்டன**

வாலிபர் பகுதி

# சிங்கம் கெர்ச்சிக்கிறது...

ஆதி மனிதனாகிய ஆதாம், தேவன் தனக்கு விலக்கியிருந்த கனியை தன் துணைவி கொடுத்தாள் என்பதால் புசித்தான், புசித்ததால் மனுகுலத்திற்குப் பாவச் சனி பிடித்தது. அப்பிணி நீக்கும் பணியை செய்து முடிக்க, சாத்தானை ஜெயிக்க, காலை பனி நீங்கி சூர்யோதயம் வருவது போல் அருணோதயமாயிருக்கிற தேவமைந்தன் இவ்வுலகில் அவதரிப்பார் என்று வேதத்தின் முதல் மறை நூலிலே எழுதப் பட்டிருக்கிறது. அத்தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற மனிதனாக முன்னணைத் தேடி மண்ணனைத்தும் தன்னால் விண்ணைக் காண வழிவகுக்க வேண்டும் என்ற நோக்குடன், மரியாளின் மைந்தனாய் இடையர்களுக் கானந்தமளித்தவனாய், தாவீதின் ஊரில் தாவி வந்துதித்தார். தரணியை மீட்க வந்த தற்பரன் இயேசு, அந்த யூதா கோத்திரத்து சிங்கத்தின் நாமத்தினால் அரிமாவின் பெலன் கொண்ட இளைஞர்களாகிய உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

மேசியாவை இவ்வுலகிற்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்திற்காக இஸ்ரவேல் ஜனத்தை தேவன் தன் சொந்த சம்பத்தாக தெரிந்து கொண்டார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஜெய வேந்தனாகிய தேவனால் நடத்தப்பட்டு, யோசுவாவின் தலைமையில் கானானை சுதந்தரித்தார்கள் இஸ்ரவேலர்கள். காலச் சக்கரம் உருண்டது சுற்றம் பார்த்து குற்றம் புரிந்தனர், கொற்றவன் கொடுமையானவனாக இருந்தாலும் எங்களுக்கவன் வேண்டுமென்ற கோஷம் எழுப்பி மோசம் போனார்கள். தேவன் அவர்களுக்கு சவுல், தாவீது, சாலொமோன் என்ற அரசர்களை அரியணையில் அமர்த்தினார், அதின் பின் ராஜ்யம் பிளவுபட்டது. வடக்கு ராஜ்யமாயிருந்த இஸ்ரவேல் கொடுமை பல புரிந்தது, தேவ உறவை இழந்தது. அந்நேரத்தில் தான் அத்திபழம் பொறுக்கின ஆமோஸ் மூலமாய், **"சிங்கம் கெர்ச்சிக்கிறது, யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார், யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?"** (ஆமோஸ் 3:8) என்ற வினாவை விண்முட்ட எழுப்புகிறார். அந்த சிங்கத்தின் கர்ஜனையை கேட்போம் வாருங்கள் வாலிபரே!.

***<u>சிங்கம் கர்ஜனை செய்ய காரணம்?</u>***

ஆபிரகாமுக்கு, அவன் கால் மிதித்த தேசத்தை தருவேன் என்று தேவன் வாக்கருளினார். ஆபிரகாமின் காலத்தில் அது நிறைவேறவில்லை. பின்பு அவன் மகன் ஈசாக்கு எழும்பி, அவன் பின் யாக்கோபு தோன்றி, யோசேப்பு பிறந்து சகோதர பகை மூண்டு, எகிப்திற்கு விற்கப்பட்டான், பின்பு

அவனே ஜீவரட்சனை செய்தான். யாக்கோபு கூண்டோடு எகிப்திற்கு போனான். அதின் பின்பு யோசேப்பை அறியாத வேறு ஒரு ராஜா எழும்பி இஸ்ரவேலர்களை ஒடுக்கினான். சற்றொப்ப நானூற்று மூப்பது ஆண்டுகள் அடிமை சங்கிலியால் அவர்கள் கட்டப்பட்டார்கள். அப்பொழுது தான் தேவன் அவர்களை விடுவிக்கும்படி மனமிரங்கினார்.

பத்து வாதைகளை நடப்பித்து பார்வோனின் பிடியிலிருந்து பரலோகத்தின் தேவன் அவர்களை விடுவித்தார். மோசேயின் தலைமையில் விடுதலை கீதம் மூழங்கி, சீனாய் மலைக்கு வந்து சேர்ந்த அவர்களுக்கு தன் வேதம் வழங்கினார். அது மாத்திரமா தன் பிள்ளைக்கு அறிவூட்டும் தந்தையாயிருந்த அவர், ஒரு தந்தை தன் மகனால் நடக்க முடியாத தூரத்தை அவர் தூக்கி நடத்துவது போல அவர்களை வனாந்திரத்தில் நடத்தினார் (உப.1:31) பகலிலே, குளிர் வேண்டும் என்பதற்காக மேகஸ்தம்பம் கொடுத்தார். இரவிலே அக்கினி ஸ்தம்பம் கொண்டு அவர்களை வழி நடத்தினார். அவர்களோடு யுத்தத்திற்கு வந்த இராட்சதர்களை அழித்தார். அதில் ஒருவன் தான் ஒன்பது முழ நீளமும் நாலு முழ அகலமும் கொண்ட கட்டிலில் படுத்திருந்த ஓக் என்னும் பாசானின் ராஜா.

நாலுநாள் பாதையாத்திரை போகிற நம் நாட்டவர்களிடம் கேட்டுப்பாருங்கள், உடை எப்படி நாறும்? கால் எப்படி வீங்கும் என்று. இதையும் தன் மனதில் கொண்ட நமது அன்பின் தேவன், நாற்பது வருஷமாய் அவர்கள் வஸ்திரம் பழையதாய்ப் போகவுமில்லை, அவர்கள் கால் வீங்கவும் இல்லை என்கிறார். என்ன ஒரு கருசனை. தண்ணீர் இல்லையா அற்புதமாக வரவழைப்பார். உணவு சலித்துவிட்டதா உடனே மன்னாவை கொடுப்பார். அத்தோடு அவர்கள் கானானுக்கு வந்தடைந்த போது அவர்கள் நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகள், அவர்கள் வெட்டாத துரவுகள், நடாத திராட்சத் தோட்டங்கள், ஒலிவத் தோப்புகள் என்று பட்டியல் நீண்டு கொண்டு போகிறது. இத்தனையும் கொடுத்தார் இஸ்ரவேல் தேசத்திற்கு இத்தனையும் கொடுக்கும்போதே, அவர்களுக்கு என்னை மறந்து போகாதே என்ற எச்சரிப்பையும், அதின் விளைவையும் கொடுத்தார் (உபா. 28,29 அதி) இப்படி அவர் செய்தும், ஆமோஸ் காலத்தில் இஸ்ரவேலின் நிலை என்ன? யூதாவின் நிலை தான் என்ன? **யூதாவோ, கர்த்தரின் வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம் போனார்கள்** (ஆமோஸ் 2:4) சரி, **இஸ்ரவேலர்களோ நீதிமானை பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப்போட்டார்கள். சிறுமையானவர்களின் வழியை புரட்டினார்கள். வாலிபர்களே அடுத்த பாவத்தை எழுதுவதற்கே கை மறுக்கிறது, தேவனின் நாமத்தைக் குலைச்சலாக்கும்படிக்கு மகனும் தகப்பனும் ஒரே**

**பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.** பாவத்தை பார்க்கமாட்டாத சுத்த கண்ணர் இதை சகிப்பாரோ ஆகவே தான் கெர்ச்சிக்கிறார் வருகிறது தண்டனை, மனந்திரும்பு என்கிறார் இஸ்ரவேலை நோக்கி.

எனக்கன்பானவர்களே! தேவன் காரணமின்றியா கர்ஜிக்கிறார் இன்னும் அவர் சொல்லுவதை கேளுங்கள், அவர் இஸ்ரவேலின் குமாரரில் சிலரை தீர்க்கதரிசிகளாகவும், அவர்களின் வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழும்பப்பண்ணினவர். அவரே என்ன கேட்கிறார் பாருங்கள், "... இப்படி நான் செய்யவில்லையா" என்று கேட்கிறார். கேட்கிறவர் கர்த்தர் மழுப்பல் எல்லாம் முடியாது. அவர் அப்படி செய்த போது இஸ்ரவேலர்கள் என்ன செய்தார்களாம் "நசரேயருக்குத் திரட்சரசம் குடிக்கக் கொடுத்து, தீர்க்கதரிசிகளை நோக்கி; நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டாம் என்று கற்பித்தீர்கள்" (ஆமோஸ் 2:11,12,13) சரீர நன்மைகளை கொடுத்த தேவன், "**பிரமாணம், நசரேயர், தீர்க்கதரிசனம்**" என்று ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் கொடுத்தார். ஆனாலும் இஸ்ரவேலும், யூதாவும் தேவனை மறந்தது. ஐயகோ பாவம் பிறந்தது, பரிசுத்தம் அவர்களை விட்டுப் பறந்தது. பாவம் செய்ய ஞானிகளும், நன்மை செய்ய மூடர்களுமானார்கள்.

எனக்கன்பான வாலிபனே! பழைய ஏற்பாட்டில் சிங்கம் கெர்ச்சித்திருக்கிறது. நமக்கும் தேவன் அநேக சரீரப் பிரகாரமான நன்மைகளை செய்திருக்கிறார். நாம் பிழைத்துக் கிடப்பதே அவருடைய சுத்த கிருபை தான். அதை எல்லாம் விட நாம் எல்லாரும் தேவனோடு நித்தியத்தை கழிக்க வேண்டும் என்பதற்காக பாவம் அறியாத இயேசுவானவரை பலியாக கொடுத்தாரே. அப்படி கொடுப்பதன் மூலம் தமது அன்பை வெளிப்படுத்தினாரே, கிறிஸ்துவும் நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காக மரித்தாரே, அதுவும் எப்படிப்பட்ட மரணம். எத்தனை அவமானம், நிந்தை, கசையடி, வசையடி, தலையில் முள், கை, கால்களில் ஆணிகள் அத்தனையும் உன்னையும், என்னையும் மீட்கத்தானே. நமக்காக சிறந்த அன்பை வெளிப்படுத்திய அவர் நமது அன்பை கேட்பது நியாயம் தானே!

நாமும் இஸ்ரவேலரைப் போல அவரின் அன்பை புரியாமல் அவரிடம் எதிர்த்து நின்றால், நம்மை நியாயந்தீர்ப்பது அவரது வசனமே (யோவான் 12:48) மனிதன் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி. 9:27) புதிய ஏற்பாடு நமக்கு கொடுக்கும் எச்சரிப்பை பாருங்கள், **தேவதூதர்கள் மூலமாய்** சொல்லப்பட்ட வசனத்திற்கு (பழைய ஏற்பாடு) விரோதமான எந்தச் செய்கைக்கும் நீதியான தண்டனை கிடைக்கும் என்பது உறுதியாக்கப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் **தேவன் தாமே சாட்சி**

**கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலை அற்றியிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவோம்** (எபி. 2:2-4) என்று சிங்கம் கெர்ச்சிக்கிறது.

சிங்கம் கெர்ச்சிக்கிறது, நாம் தேவனிடம் திரும்ப வேண்டும், அதாவது இயேசுவின் சுவிசேஷத்தை கேட்டு, தேவனையும், இயேசுவையும் விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசு தேவ சுதன் என்ற அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று முடிவு பரியந்தம் நிலைநிற்க வேண்டும். (ரோ. 10:17, யோவா 14:1; 2கொரி 7:10; அப். 8:37; அப். 22:16; வெளி. 2:10) அப்படி நாம் திரும்பிய பின். அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தின்படி வாழ்ந்து அதை பிரசங்கித்தது போல நாமும் செய்யவேண்டும். ஒரு முறை இயேசுவின் நாமத்தை குறித்து பேச வேண்டாம் என்று இயேசுவை கொலை செய்த சனகரிப் சங்கம் கட்டளையிட்டது, ஆனால் அப்போஸ்தலர்களோ எருசலேமை தங்கள் போதகத்தால் நிறைத்தார்கள். சங்கம் தடுத்தால் என்ன யூதா கோத்திரத்து சிங்கம் கெர்ச்சிக்கிறது யார் தீர்க்கதரிசனம் சொல்லாமல் இருப்பான் என்பது போல் தங்கள் செயலால் கேட்டார்கள். அது போல, நாமும் இயேசுவின் சுவிசேஷத்தை பிரசிங்கிப்போம். அனைவரும் சிங்கத்தின் கர்ஜனையை கேட்க வைப்போம். அப்படி செய்ய தேவன் தாமே உங்களுக்கும் எனக்கும் உதவுவாராக! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**


*திட்டமிடுங்கள் !* *பங்கு பெறுங்கள் !!*

## எட்டாவது வேதாகமக் கருத்தரங்கம்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார் மற்றும் எக்லீசியா வேதாகமக் கல்லூரி இணைந்து நடத்தும் எட்டாவது வேதாகமக் கருத்தரங்கில் சபையாராக கலந்து கொள்ள இப்போதிருந்தே ஜெபிக்க வேண்டுகிறோம்.**

**நாள் : அக்டோபர் 11, 12 செவ்வாய், புதன்**
**(அரசு விடுமுறை நாட்கள்)**
**இடம் : காங்கயம் கிறிஸ்துவின் சபை வளாகம்**

தொடர்பு முகவரி :

**கிறிஸ்துவின் சபை,** 288, தாரை ரோடு, காங்கயம்.
✆ 04257-230030, 230603 செல் : 98427-30382, 98428-30382

# விளைச்சலுக்கு ஏற்ற மண்

சிறுவர் பகுதி

மாற்கு :4:1:20

தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களோடு சேர்ந்து வேதத்தை கற்றுக்கொள்ள உதவி செய்த தேவனுக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன். சரி, இந்த மாதத்திற்குரிய பாடம் என்னவென்று நாம் பார்க்கலாமா? வாருங்கள் என்னோடு!.

அறிவியலின் முன்னேற்றத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது உலகம்! எனவே விவசாயிகள் கூட பயிரை விளைவிப்பதற்காக பெரிய இயந்திரங்களை பயன்படுத்துகிறார்கள். மண்ணை உழுவதற்கு டிராக்டர் போன்ற வாகனங்களையும் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் வேதாகம காலத்தில் அந்த விதமாக இல்லை. இப்போது இருப்பதை போல் இல்லாமல் அது மிகவும் வித்யாசமாகவே இருந்தது. அப்போதைய விவசாயிகள் இயந்திரங்களை கொண்டு வரிசையாக விதைக்காமல், விதைகளை தாறுமாறாகவும், ஓர் ஒழுங்கு இல்லாமல் அப்படியே விதைகளை நிலத்தில் தூவியும் விடுவார்களாம்.அது அவர் களுக்கு சுலபமாக இருந்தது. அவர்கள் தங்கள் கழுத்தை சுற்றி ஒரு பையை போட்டு கொண்டு அதில் விதையை சுமந்து, கையில் எடுத்து எடுத்து "தூவி" விடுவார்களாம், இது அப்போது நடைமுறையிலிருந்த ஒரு விதம். ஆனால் அதில் என்ன நஷ்டம் என்றால் எல்லா விதைகளும் நல்ல நிலத்தில் விழாது.

சரி, இயேசுவும் இதைப்போன்று தூவிக் கொண்டு இருந்த விவசாயியை பற்றித்தான் மாற்கு :4ல் கூறுகிறார். அவன் தூவின விதைகள் நான்கு விதமான நிலத்தில் விழுந்தது. (1) வழியருகேயும் (2) கற்பாறையின் மேலும் (3) முட்செடியின் மீதும் (4) நல்ல நிலத்திலும் விழுந்தது. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் மட்டுமே வளர்ந்து கனி கொடுத்தன.

இயேசுவின் சீஷர்களால் இந்த உவமையை புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே அவரை விரிவாக கூறும்படி கேட்டுக்கொண்டனர். பின்பு இயேசு இவ்வாறாக விளக்கினார். விதை என்பது தேவனுடைய வசனமாகும். அதன் சிறப்பு என்ன என்றால் அந்த விதை தனக்குரிய (ஒரே விதமான) கனியை மட்டும் தான் கொடுக்கும். இது எதைக் குறிக்கிறதென்றால் உண்மையான தேவனுடைய வசனம் ஒருவனுக்கு போதிக்கப்பட்டால், அதன் பலனாக ஒரு உண்மையான கிறிஸ்தவனும் சபையும் நமக்கு




கிடைக்கும். இதற்கு மாறாக தேவனுடைய வசனமாகிய விதை புது மதங்களையோ, பிரிவினைகளையோ கொடுக்காது.

இயேசு இந்த காரியத்தை அவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார். தேவனுடைய வசனம் கீழ்ப்படியாத இருதயம் உள்ளவர்களிடத்தில் கனிகளை கொடுக்காது. தேவன் மனிதர்களை விசுவாசிக்கும்படியாகவோ, வசனத்தை கேட்டுக்கொள்ளும்படியாகவோ கட்டாயப்படுத்துவதில்லை, மனிதர்கள் தங்கள் இருதயத்தை, வசனத்தை கேளாதபடி கடினமாக்கு கிறார்கள். ஆனால் உண்மையுள்ள இருதயம் உள்ளவர்கள் இடத்தில் அது நீதியின் கனிகளை தந்து வளருகிறது.

சரி, இந்த கதையின் மூலம் நாம் தெரிந்து கொள்வது என்ன? நம்முடைய இருதயம் “மாறுபடுகிற ஒன்று” - அதாவது ஒரு மனிதன் கடந்த காலத்தில் வசனத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததால் கூட சில காலங்களில் தன் இருதயத்தை “மாற்றி” வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறான். இயேசு கூறுகிற ஒவ்வொரு வகையான நிலமும் மனிதனுடைய இருதயத்தைத் தான் குறிக்கிறது.

இப்பொழுது! நீங்கள் எவ்வகையான நிலமாக இருக்கிறீர்கள்? அதை நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும்!. நாம் எல்லோரும் நல்ல மண்ணாகவும், நல்ல நிலமாகவும் இருந்து தேவனுக்கேற்ற கனிகளை கொடுப்போம்! தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

**R.A.R.Nayagam**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

தேவன் தம்முடைய நேச குமாரனைப் பற்றி வசனங்களில் வெளிப்படுத்தியுள்ள காரியங்களை இதுவரைப் படித்தோம் இப்போது அவற்றின் சுருக்கத்தைப் பார்ப்போம். இயேசு தேவன், கர்த்தர் (எஜமான்), கிறிஸ்து (மேசியா, ராஜா) நம்முடைய பிரதான ஆசாரியர், நம்முடைய நியாயாதிபதி மேலும் இயேசு நம் சிறந்த நண்பர். அவர் இந்த உலகத்தில் வாழ்ந்த வாழ்க்கை மூலமாக அவர் நம்முடைய சிறந்த நண்பரானார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். இப்போது வேறு சில காரியங்களைப் பார்ப்போம்.

நமக்காக அவருடைய தாழ்மையும், பாடுகளும் யோவான் 1:10,11 வசனங்களை நாம் வாசிக்கும்போது அவர் உலகத்தில் இருந்தார் உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார் அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களில் பெரும்பாலானோர் இயேசு "கிறிஸ்து, கர்த்தர்" என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் இது இயேசுவை வெகுவாக தாழ்மைப்படுத்தி அவருக்கு அதிக வேதனையைக் கொடுத்தது.

ஏசாயா 53:3-7யை நாம் வாசிக்கும்போது ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வருவதற்கு சுமார் 700 வருடங்களுக்கு முன்பே தேவன் இந்த அற்புதமான தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தினார். அந்த தீர்க்கதரிசனத்தில் இயேசு கிறிஸ்துவின் தாழ்மையையும், பாடுகளையும் குறித்து தேவன் அற்புதமாக முன்னறிவித்துள்ளார். இதை எந்த மனிதனும் செய்ய முடியாது. தன்னுடைய குமாரன் மனிதரால் அசட்டை பண்ணப்படுவார், புறக்கணிக்கப்படுவார் என்று தேவன் முன்னறிவித்தார். அதுமாத்திரமல்ல இயேசு துக்கம் நிறைந்தவரும் பாடு அநுபவித்தவருமாயிருந்தார் அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார் அவரை எண்ணாமற்போனோம் என்று தேவன் இயேசுவைப் பற்றி முன்னறிவித்திருந்தார். ஆனால் உண்மையில் நம்மை அதிகமாக நேசிப்பவர் நம்முடைய அக்கிரமங்களுக்காக காயப் படுத்தப்பட்டார், நம்முடைய மீறுதல்களுக்காக அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். உண்மையிலேயே தேவன்

நம்முடைய அக்கிரமங்களையெல்லாம் இயேசு மீது சுமத்தினார். நமக்காக இயேசு எவ்வளவு பாடுகளை சகித்தார் என்று பாருங்கள். தேவனுடைய பூரண குமாரன் நமக்காக தம்மை எவ்வளவு தாழ்த்தினார் எவ்வளவு வேதனைப்பட்டார் என்று பாருங்கள்!. உங்களையும், என்னையும் இயேசு எவ்வளவாய் நேசிக்கிறார்! IIகொரி 5:21யை வாசியுங்கள் தேவன் பாவமறியாத இயேசுவை நமக்காக பாவமாக்கினார். அது ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தபடி தேவன் இயேசு மீது அந்த கோரச் சிலுவையிலே நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் விழப்பண்ணினார் என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது நம்முடைய அருமை ரட்சகர் நம்முடைய பாவங்களுக்காக தம்மை எவ்வளவு தாழ்த்தினார் பாருங்கள்! நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக தேவன் பாவமாக்கினார்.

மத் 27:26-50யை வாசிக்கும்போது யூதஜனங்கள் திருடனும், கொலைகாரனுமாகிய பரபாசை விடுதலை செய்து பாவமற்ற இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்று கூக்குரலிட்டார்கள். இயேசு வாரினால் அடிக்கப்பட்டார். ரோமப் போர்ச் சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின் மேல் வைத்து சிவப்பான அங்கியை அவருக்கு உடுத்தி யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி அவரைக் கையினால் அடித்தார்கள் இது மனதளவிலும் சரீரப்பிரகாரமாகவும் இயேசுவைப் புண்படுத்தியிருக்கும்? அப்போது அந்த பக்கமாக சென்றவர்கள் இயேசுவைப் பார்த்து தேவாலயத்தை இடித்து மூன்று நாட்களில் கட்டுவேன் என்று சொன்னவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள், நீ தேவனுடைய குமாரனேயானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். இந்த சுடுவார்த்தைகள் இயேசுவின் இருதயத்தை எப்படி குத்தியிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அதுமாத்திரமல்ல பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும், மூப்பர்களும் இயேசுவைப் பார்த்து இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிருந்து இறங்கி வரட்டும் அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே அவர் இவன் மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்று இகழ்ந்து பேசினார்கள். எபிரெயர் 12:2-4ல் நாம் வாசிக்கும்போது இங்கே கர்த்தராகிய இயேசு அந்த கோரச்சிலுவையின் வேதனையை சகித்தார் அதுமாத்திரமல்ல அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்

பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். என்று நாம் வாசிக்கிறோம். மேலும் தேவனுடைய ஒரே பேரான குமாரன் பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதால் தம் சொந்த இரத்தத்தை சிந்துவதற்கு தம்மை ஒப்புக்கொடுத்தார். உங்களுக்காகவும், எனக்காகவும் இயேசு எப்படி தம்மைத் தாழ்த்தி வேதனைப்பட்டார் என்று நாம் உணரவேண்டும்.

1பேதுரு 2:22-23ல் நாம் வாசிக்கும்போது அவர் பாவஞ் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. ஆனால் அவர் யாரை இரட்சிக்க வந்தாரோ அவர்களோ அவரை நிந்தித்தார்கள்.

1பேதுரு 3:18ல் நாம் வாசிக்கும்போது கிறிஸ்து என்னுடைய பாவத்திற்காகவும் உங்களுடைய பாவங்களுக்காகவும் பாடுபட்டார். அநீதியுள்ளவர்களாகிய நமக்குப்பதிலாக நீதிபரராகிய அவர் பாடுபட்டார். இந்த வசனங்களை நாம் தியானிக்கும்போது நிச்சயமாக இயேசு நம்முடைய சிறந்த நண்பன் என்பதையும் அவர் நமக்காக எல்லாத் தாழ்மையையும், பாடுகளையும் சகித்துக்கொண்டார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும். இயேசு நம்முடைய சிறந்த நண்பன் என்பதற்கான மூன்றாவது காரணத்தை நாம் இப்போது பார்ப்போம்.

இயேசுவினுடைய மரணமும், இரத்தம் சிந்துதலும், யோவான் 15:13ல் நாம் வாசிக்கும்போது நம்முடைய அருமை இரட்சகர் சொல்லும்போது ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்தலுமில்லை என்று சொல்கிறார். ஆம் பிரியமானவர்களே இந்த வல்லமையான வார்த்தைகளை நம்முடைய அருமை இரட்சகர் சொல்லி சிறிது காலத்திற்குள்ளேயே அவர் தம்முடைய சிநேகிதர்களுக்காக தன் ஜீவனைக் கொடுத்தார். முக்கியமாக நம்முடைய அருமை இரட்சகர் 14 ஆம் வசனத்தில் சொன்ன காரியத்தை கவனியுங்கள் "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால்; என் சிநேகிதராயிருப்பீர்கள்" என்று சொன்னார். எனவே இயேசு தன்னுடைய சிநேகிதர்களுக்காக மரித்தார். மேலும், இயேசு நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர் களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள் என்று சிநேகிதருக்கான தகுதியையும், விளக்கத்தையும் கொடுத்தார் அந்த விளக்கத்தின்படி நீங்கள்

இயேசுவின் நண்பர்களுள் ஒருவராக இருக்கின்றீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றே உங்கள் நிலைமையை மாற்றி உங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து பாவமன்னிப்புப் பெற தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று நீதியுள்ள, பரிசுத்த ஜீவியம் ஜீவித்து பிதாவுக்கும் அவருடைய பிரிய குமாரனுக்கும் மகிமையைக் கொண்டு வருவீர்களா?

ரோமர் 5:6-8யை வாசியுங்கள் எவ்வளவு வல்லமையான வசனப்பகுதி இது! தேவன் தம்முடைய அன்பை உங்களுக்காகவும் எனக்காகவும் நிரூபித்துள்ளார், அவர் எப்படி நிரூபித்தார்? அவருடைய பிரியகுமாரன் உங்களுக்காகவும் எனக்காகவும் மரித்தார், இப்படி தேவன் தம்முடைய அன்பை விளங்கப்பண்ணினார். இந்த வசனங்களில் நாம் பார்க்கும்போது தேவன் நம்மேல் தம் அன்பை விளங்கப்பண்ணின விதம் மிக அருமையானது. நாம் பாவிகளாக தேவனற்றவர்களாக, நம்மை நாம் இரட்சித்துக் கொள்ள பெலனற்றவர்களாக இருந்தபோது இயேசு கிறிஸ்துவினுடைய தியாக மரணத்திற்கு நாம் பாத்திரராக வாழ்ந்து கொண்டிருக்க வில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பு அதாவது துன்மார்க்கமான காரியங்களை செய்து கொண்டிருக்கும்போது கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார். என்ன ஒரு ஈடுஇணையற்ற அன்பு என்று பாருங்கள்!.

யோவான் 10:11,15ல் நாம் வாசிக்கும்போது இயேசு தன்னை நல்ல மேய்ப்பனாக எந்தவித சந்தேகமின்றி நிரூபித்திருக்கிறார். இயேசு அதை எப்படி செய்தார்? ஆடுகளுக்காக தன் ஜீவனையே கொடுத்தார். என்ன ஒரு நல்ல மேய்ப்பன்! மற்றும் சிறந்த நண்பன் இயேசு என்று பாருங்கள்!

கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற மாதத்தில் இயேசு எப்படி நமக்கு அற்புதமான நண்பர் என்பதை வெளிப்படுத்தும் சில வசனங் களைப் பார்க்கலாம் அதற்குள் இயேசு கிறிஸ்து ஆச்சர்யமான வழிகளில் நம்மை சிநேகிதித்திருக்கிறார் என்பதை மிக ஆழமாக தியானிப்போம், அவர் புதிய ஏற்பாட்டில் கட்டளையிட்டவைகளை நம்மால் முடிந்தவரை செய்யபாடுபட்டு நாம் அவருடைய நண்பர்கள் என்பதை இந்த உலகுக்கு காட்டுவோம். அதுமாத்திரமல்ல இயேசு எவ்வளவு அற்புதமான நண்பர் என்பதை மற்றவர்களுக்கும் சொல்ல, அவர்களை உற்சாகப்படுத்தி இயேசுவுக்கு கீழ்ப்படிய செய்து இயேசுவில் இருக்கும் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் நித்திய ஜீவனின் நம்பிக்கையையும் அவர்கள் பெற்றுக்கொள்ளும்படி நாம் செய்யவேண்டும்.

**பென்னி** **சார்லி டிபால்மா.**

# "நாம் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்"

**தி**ருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவரையும் நல்மீட்பர் இயேசுவின் இனிய நாமத்திலே வாழ்த்துவதிலே மிகுந்த உவகை அடைகின்றோம். நம் செய்திக்கான வசனப்பகுதி 1 கொரி 1:26 இந்த உலகில் ஞானத்தில் மிகச்சிறந்தவர்களும் ஒவ்வொரு வினாடியிலும் பணமாகச் சம்பாதித்து குவித்து வைப்பவர்களும், புகழின் உச்சாணிக்கொம்பிலும் இருக்கின்ற ஆயிரக்கணக்கான கோடிக்கணக்கான மக்களையும் நாம் பார்க்கின்றோம். அவர்களுக்கெல்லாம் கிடைக்காத மாபெரும் சிலாக்கியம் நம்மை தேவன் அவரது பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்டிருக்கிற இந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்கான அழைப்புதான். "இந்த அழைப்பானது" பாதாள வாழ்விலிருந்து "பரலோக வாழ்விற்கான அழைப்பு", பாவத்திலிருந்து மீட்டு பரிசுத்தத்திற்கானது, அருவருப்பான இந்த உலகிற்கு விலக்கி மகா "அருமையும் பரிசுத்தமுமான ஜீவநகரத்திற்கான அழைப்பு" இந்த அழைப்பானது (தீத்து 2:11) எல்லோருக்குமானது. தேவகிருபையால் நாங்கள் பெற்றுக்கொண்ட இந்த மகா மேன்மையும், அருமையுமான உன்னத வாழ்விற்கு உங்களையும் அழைக்கின்றோம்.

## I <u>***இரட்சிப்பிற்கான அழைப்பு***</u> ( II ***தெச 2:14*** )

ஆண்டவரின் ஊழிய நாட்களில் இயேசுவை யூதர்கள் (மாற் 6:3) மரியாள் வயிற்றிலிருந்து பிறந்த மனிதனாக பார்த்தார்களே தவிர இரட்சகராக ஏற்க மனதில்லை. இயேசுவை இரட்சகர் என்றறிந்திருந்தால் சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள் (1கொரி 2:7-8) அப். 2:36-37 இந்த இயேசுவை தான் தேவன் உயிரோடு எழுப்பி ஆண்டவரும் இரட்சகருமாக ஆக்கினார். இன்றைக்கு (அப். 4:12) அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வேறு எந்த ஒரு நாமத்தினாலும் இரட்சிப்பு இல்லை. இவரே இரட்சகர், இவரே தேவ குமாரன், இவரே சபைக்காக ரத்தம் சிந்தினார் (அப் 20:28) இவரை விசுவாசித்து இவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றால் மட்டுமே அந்த இரட்சிப்பிற்கான அழைப்பு நமக்குப் பொருந்தும்.

பாவமன்னிப்பிற்கான இந்த அழைப்பு இன்றைக்கு ஏசாயாவைப் போல் தாயின் கர்ப்பத்திலல்ல (ஏசா 49:1) அல்லது எரேமியாவைப் போலல்ல (எரேமியா 1:5) **சுவிசேஷத்திலே:** அந்த அழைப்பு உண்டாயிருக்கிறது.

1 கொரி 15:1-4 கிறிஸ்து நமக்காகப் பாடுபட்டு, மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இதுவே சுவிசேஷம் வேறொருவர் நமக்காக மரிக்கவில்லை, மனிதர்களின் ரத்தத்தில் நமக்கு இரட்சிப்பில்லை, தேவகுமாரனின் இரத்தமே நம் பாவங்களை சுத்திகரிக்கும் வல்லமையுள்ளது. (கலாத்தியர் 1:6-9) ஒருவேளை வேறொரு சுவிசேஷத்தை ஒருவர் அறிவித்தால் அவர் வேத வசனத்தின்படி போதிக்க வில்லை அது தவறான சத்தியம் அதிலே இரட்சிப்பு இல்லை.

**II *நித்திய ஜீவனிற்கான அழைப்பு: I தீமோ 6:12***

யோவா 3:16 குமாரனை விசுவாசிக்கிறவர்கள் அழியாத வாழ்வைப் பெறுவார்கள். தேவனும் தேவ குமாரனும் முடிந்து போகாத ஆயுசுள்ளவர்கள். எபி 1:12ல் சொன்னபடி அவருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை என்றென்றைக்குமான நித்திய வாழ்வு. (வெளிப்படுத்தின விசேஷம் 21:4) இனி மரணமும் இல்லை, துக்கமுமில்லை அலறுதலுமில்லை, வருத்தமும் இல்லை, ஆனந்தமான வாழ்வு அது (1யோவா 3:2) கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவருக்கு ஒப்பாக இருப்போம் என்று வேத வசனம் கூறுகிறது. அங்கே நாம் என்றென்றைக்கும் ஜீவனுடையவர்களாய் இருப்போம். இதுவே நித்திய ஜீவன். இதனைப் பெற (யோவா 17:3) தேவனையும், குமாரனையும் அறிந்து இரட்சிப்பிற்குள்ளாக பிரவேசிக்க வேண்டும். (யோவா 10:9) அவர் வழியாய் பிரவேசிக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் இந்த ஜீவனைப் பெறவே (பிலி 3:10-11) தனக்கு இலாபமாய்த் தோன்றின எல்லாவற்றையும் நஷ்டமாகவும் குப்பையாகவும் விட்டுவிட்டார். (யோவான் 11:25) கிறிஸ்துவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார். கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் மரித்தாலும் பிழைப்பார்கள். இப்படிப்பட்ட ஜீவனுக்காகவே தேவன் அழைத்திருக்கிறார்.

**III *சமாதானத்திற்கான அழைப்பு I கொரி 7:15***

(1கொரி 14:33) தேவன் கலகத்திற்கல்ல சமாதானத்திற்கே தேவனாய் இருக்கிறார். (ஏசா 9:6) கிறிஸ்துவிற்கு சமாதானப் பிரபு என்றொரு பெயரும் உண்டு. இன்றைய உலகம் சமாதானம் கிடைக்காமல் "மலைகள் தோறும்", "ஆலயங்கள் தோறும்" சபைகள் தோறும் தேடி அலைகின்றனர். ஆனாலும் சமாதானத்தை அடைந்ததாகத் தெரியவில்லை இந்த உலகம் மெய் சமாதானத்தை தராது. ஏனென்றால் (1யோவா 5:19) இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது.

இன்றைய சுவிசேஷ அறிவிப்பாளர்கள் கூட ஏரே 6:14 சமாதானமில்லாதிருந்தும் சமாதானம், சமாதானம் என்று தேவன் சொல்லாதவற்றை பொய்யாய் பிரசங்கின்றனர் அதிலே ஆத்தும


சமாதானத்தைப் பெற்றுக் கொள்வதில்லை (யோவான் 8:44) பிசாசானவன் பொய்யை தன் சொந்தத்திலிருந்து எடுத்து பேசுகிறான்.

(யாக்கோபு 3:17) பரத்திலிருந்து வருகின்ற ஞானமே அந்த சுத்தமான, பூரணமான மெய் சமாதானத்தைத் தரும். அதனை பரத்திலிருந்து வந்த தேவகுமாரனே தருகிறவராய் இருக்கிறார். (யோவான் 14:27) இந்த உலகம் தரக்கூடாத, தரமுடியாத, "சமாதானத்தை" கிறிஸ்துவே தருகிறார். இப்பொழுது சொல்லுங்கள் நாம் இந்த சமாதானத்தை அடைந்திருக்கிறோமா? (மத் 11:28 ல்) ஆண்டவர் எவ்வளவு கனிவோடு அழைக்கிறார். பாருங்கள். "நீங்கள் எல்லோரும் என்னிடத்திற்கு வாருங்கள்" என்கிறார். பிரியமானவர்களே நாம் கிறிஸ்துவிடம் தான் வந்திருக்கின்றோமா? நன்றாக நினைத்துப் பாருங்கள் கிறிஸ்து நம் ஒற்றுமைக்காக ஜெபிக்கின்ற அந்த ஜெப சத்தம் உங்கள் காதுகளில் விழவில்லையா? (யோவா 17:20-23) கிறிஸ்தவர்களாய் இருப்போம் சமாதானமாய் வாழ்வோம்.

**IV *<u>கிறிஸ்துவுடன் ஐக்கியமாய் இருக்க அழைத்தார் I கொரி</u>* <u>1:9</u>**

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு ஐயக்கியமாய் இருப்பது மிக, மிக, மிக அவசியமானது ஆதிக்கிறிஸ்தவர்கள் இதில் வெகு ஜாக்கிரதையாய் இருந்தனர். (அப். 2;42-47) கிறிஸ்து உடனான அந்த ஐக்கியத்தை வசனத்தின்படியாய் வாழ்வதில் காண்பித்தனர். 1 கொரி 10:16-17 ஒரே அப்பத்திலும் பாத்திரத்திலும் பங்கு பெற்று கிறிஸ்துவுடன் தங்களின் ஐக்கியத்தை வளர்த்துக் கொண்டனர். இதனை ஆண்டவர் உயிர்த்தெழுந்த நாளாகிய வாரத்தின் முதல் நாளில் செய்தனர். (அப். 20:7) (மத். 28:1-6) கிறிஸ்துவின் உபதேசமில்லாத வாழ்வு ஜீவனில்லாத வாழ்வு வீண். அங்கே பிதாவும் இல்லை குமாரனும் இல்லை (1 யோவான் 2:9-10) கிறிஸ்துவின் உபதேசமில்லாதவர்கள் கிறிஸ்தவர்களல்ல அங்கே கிறிஸ்து இருக்கமாட்டார். 1 யோவா 3:23-24 கற்பனைகளை கைக்கொள்வதே காரியம். I யோவா 1:3 நீங்கள் எங்களுடனே ஐக்கியமுள்ள வர்களாகும்படி ........ "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது". அன்பானவர்களே உங்கள் ஐக்கியம் யாரோடு உள்ளது? என சிந்தியுங்கள். (1) யோவா 8:32 சத்தியமே விடுதலை (வசனம்) (2) யோவா 17:17 சத்தியமே பரிசுத்தம் (வசனம்) (3) வசனமே ஆவியும் ஜீவனும். (யோவா 6:63) (4) கிறிஸ்துவே அந்த சத்தியம். யோவா 14:6 (5) வசனத்தைக் கொண்டே நியாயந்தீர்ப்பார். யோவா 12:48. தேவன் நம்மை அழைத்த இந்த உன்னதமான அழைப்பிற்கு பாத்திரவான்களாய் நடந்து (எபே. 4:1) நித்தியத்தை சுதந்தரித்துக் கொள்வோம். தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்!.

**S. பிச்சைமுத்து,** தூத்துகுடி



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription: Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு


# ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவச பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.



திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.

**ராஜ் டிவி** யில்

**திருமறை தியானம்**

பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணி

**தமிழன் டிவி** யில்

**திருமறை தியானம்**

பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணி



Sun, Kgm. Ph: 222555

Published by Church of Christ, Kangayam. Editor. S. Rajanayagam.
Design & Printed at : Sun Offset Printers, Kangayam-638 701.
Ph : 04257 - 222555,224555